# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Multidisilinary Journal )

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:6 Issue :24 October 2024

கோட்டை:6 வாயில்:24 அக்டோபர் 2024

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And  Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

---

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


---

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


இனவரைவியல் பார்வையில் — சங்க இலக்கியத்தில் மணத்துணையைத் தேர்ந்தெடுக்கும் முறைகள்
இரா.பிரதீப் ராஜ்

திணைக்கோட்பாட்டு அடிப்படையில் பதிணென் கீழ்க்கணக்கு நூல்கள்
முனைவர் இரா. யசோதா

ஈரடி, நான்கடி காட்டும் பிறன்மனை நயவாமை என்னும் பேராண்மை
மு.கயல்விழி

காலனிய நீக்கமும் தமிழின் உள்முரண் களைவும்
முனைவர் க. ஜவகர்

இமயத்தின் செடல் கதாப்பாத்திரம்
ஓர் ஆய்வு - ரா.சந்தியா

விளக்கு பண்பாடு "சாவா மூவா பேராடு"
கோ. அசோகன்

காவல்கோட்டம் நாவலின் வழி தாதனூர் மக்களின் வாழ்வியல்
க.பிரியா

சோ. தர்மன் படைப்புகளும் அந்நியமாதலும்
மு.முத்துமாரி

நாட்டுப்புற மருத்துவம் சார் கலைச்சொற்கள்
கு.வருதராஜ்

திருமங்கை ஆழ்வார்ப் பாடிய திருப்புல்லாணித் திருத்தலம்
முனைவர் ஆ. கவிதாராணி

கதை பேசும் ஆடல் கலையான கதகளி
கலாநிதி தாக் ஷாயினி பரமதேவன்

நெடுங்கல்: பண்டைய தமிழ்ச் சமூகத்தின் பெருங்கற்கால பண்பாடும்
மு.சத்தியா



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**இடுதுளை உருவாக்கத்தின் நோக்கம் மற்றும் வளர்ச்சி**
அ.சகாய ஜெசிகலா

**பெண்களின் வஞ்சினம் — இலக்கியம் மற்றும் கல்வெட்டு முன்வைத்து**
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

**சோழர்கால கலைப்படைப்பில் திருவேள்விக்குடி கோயில்**
ச.பாப்பாசெல்வம்

**சம்புவராயர்களின் ஆட்சியும் மாட்சியும்**
முனைவர். அ. அமுல்ராஜ்

**Exploring the Dynamics of Tourism Planning**
S.John Abraham

**Exploration of French Colonial Era Paintings in the Puducherry Government Museum**
Gayathry. D

**Revolutionizing Data Security and Privacy in Fintech with Blockchain and Cryptocurrencies**
P.M.Shiyana.

**மக்கள் பாடகர்களின் சமூக நிலை**
வ.விக்டர்

**இசையும் சமூக விமர்சனமும்**
வ.விக்டர்

**Mridanga Cintamanih": Exploration of its Impact on Carnatic Music and Education**
V. Vijay Arun

**Study of Techniques used while adapting popular Western Instruments to perform Carnatic Music**
V. Vijay Arun

**மேற்கத்திய செவ்விசை வடிவங்களின் பரிணாமம்**
ச.ஜெயப்பிரகாஷ்.



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி


தமிழ்

# திணைக்கோட்பாட்டு அடிப்படையில் பதிணென் கீழ்க்கணக்கு நூல்கள்

*The following are fifteen books on the basis of theory*

**முனைவர் இரா. யசோதா**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை

பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி),

திருச்சிராப்பள்ளி-17

**ஆய்வுச்சுருக்கம்**

திணைக்கோட்பாட்டு அடிப்படையில் பதிணென் கீழ்க்கணக்கு நூல்கள் என்னும் தலைப்பில் இக்கட்டுரையானது ஆராயப்பட்டுள்ளது. திணை ஒழுக்கங்களான, நிலம், பொழுதுகளும், உரிப்பொருள், கருப்பொருள்களையும் கொண்டு திணைக்கோட்பாடு பார்க்கப்பட்டுள்ளது. சங்கம் மருவிய கால மக்கள் வேட்டையாடுதல், திணையெடுத்தல், ஆடு, மாடு மேய்த்தல் போன்ற தொழில் சார்ந்த கோட்பாடுகளையும் நிலங்களுக்கான கட்டுப்பாடுகளையும் முறையாக பின்பற்றி அதன் வழி செயல்படும் கூறுகளைக் கொண்டு திணைப்பாகுபாடு ஆராயப்பட்டுள்ளது. பதிணென்கீழ்க்கணக்கு நூல்களில் அமைந்துள்ள பாடல் அமைப்புகளைக் கொண்டு திணை வாரியாகப் பகுத்து, அவர்தம் செயல்பாடுகளைக் கோட்பாடாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது.

## *Abstract*

*This article is researched under the title 'Tenteen Sub-Theory Based Books'. Sub-disciplines are considered in terms of sub-disciplines, land, pastimes, subject matter and themes. In the pre-Union period, the people of the Sangam era have systematically followed the principles of occupations such as hunting, harvesting, goat and cow herding and the restrictions on land and the elements that work through it have been investigated.According to the song structures found in more than fourteen texts, it is analyzed department wise and its functions are theoretically investigated.*

**திறவுச்சொற்கள்**

பாத்தியம் — உரிமை, முகை — மொட்டு, நமர் — சுற்றம் சுரும்பு — வண்டு, இமிர் — ஒலி, ஏமாப்பு — பாதுகாப்பு, தாளாண்மை — ஊக்கம், எழிலி — மழைமேகம், இருங்கடல் — கரியகடல்.

*Keywords*

*Pathiyam — Right, Mugai — Bud, Namar — Surtam ,Surumbu — Beetle, Imir — Sound, Emapu — Protection, Talanam — Encouragement, Ezhili — Rain Cloud, Irkatal — Black Sea.*

**முகவுரை**

திணை என்பது ஓர் இலக்கியக் கோட்பாடாக அறிந்து கொள்வது முக்கியமானது. தொல்காப்பிய, பொருளதிகாரத்தில் திணை இலக்கியம் பற்றிய செய்திகளை அகத்திணையியல், புறத்திணையியல், செய்யுளியல் போன்ற இயல்களில் காணலாம். மக்களின் அகப்புற ஒழுக்கங்களை ஒன்றிற்கொன்று புறனாக விளக்கியுள்ளார். தொல்காப்பியரின், அகத்திணைகளில் குறிஞ்சி முதலாக எழுதிணைகளும், புறத்திணைகளில் வெட்சி முதலாக எழுதிணைகளும் பூக்களையே குறியீடாகக் கொண்டிருக்கின்றன. அகம், புறம், புறனாதல் மூன்றும் சேர்ந்து அமைதல் திணைக்கோட்பாடாகும். இதனை பதிணென் கீழ்க்கணக்கு நூலான அற இலக்கியங்களின் வழி ஆராயலாம்.

**திணைக்கோட்பாடு**

திணை என்பது ஒழுக்கம், நிலம் என்ற இருவேறு பொருள்களைக் குறிக்கும். திணைக்கோட்பாட்டில் குறிப்பிடப்படுவது நிலம் என்கிற திணை வகையாகும்.

> **“நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்**
>
> **படுதிரை வையம் பாத்தியபண்பே”** (பொருள்.02)

ஐந்துவகைத் திணைகளுள் நடுவில் உள்ள பாலைத்திணை நீங்கலாக, நான்கு திணைகளை பகுத்துள்ளார். மேலும்,

> **“கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
>
> **முற்படக்கிளந்த எழுதிணை என்ப”** (அகத். 01)

நடுவண் ஐந்திணையோடு, கைக்கிளை, பெருந்திணை சேர்த்து ஏழு அகத்திணைகளை பகுக்கிறார் தொல்காப்பியர்.

**“வெட்சிதானே குறிஞ்சியது புறனே**

**உட்குவரத் தோன்றும் ஈர்ஏழ் துறைத்தே”** (புறம். 01))

அகத்திற்கு புறம்பான, புறத்திணைகளும் பகுக்கப்பட்டுள்ளது.

**“திணை இலக்கியம் என்பது நிலமும் பொழுதும் இயற்கையைப் பின்னணியாகக் கொண்டு மனித வாழ்வினைப் புனைவதாகும்.”** (ஸ்ரீகுமார், எஸ். தமிழில் திணைக்கோட்பாடு)

என்று ஸ்ரீகுமார் குறிப்பிடுகிறார். திணைக்கோட்பாடென்பது எந்த திணையாயினும், யார் கூற்று நிகழ்த்த வேண்டும் என்றும், எந்த சூழல்களில் நிகழ்த்த வேண்டும் என்றும் குறிப்பிடுவது என்கிறார் தொல்காப்பியர்.

ஒரு போர்ச் செயலுக்கு இன்னொரு பாலியல் செயல் புறம்பானது என்பது அடிப்படை. எனவே பாலியல், மறச்செயல் இரண்டும் ஒன்றின் பக்கங்கள் எனவும் கொள்ளலாம். மனிதச் செயல்களில் இரு பக்கங்களாக பாலியமும், மறச்செயலும் விளங்கும். இது மனித வாழ்வியல் பற்றிய கருத்தியலாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டுப் போர் மறவியலையும், காம நுகர்ச்சியையும் கருத்தியலாக்க் கொண்டு அகம் — புறம் சார்ந்தவைகளோடு உருவாக்கப்பட்டதே திணைக் கோட்பாடாகும். மேலும், **“குழுச் சமூகத்தின் திணை சார்ந்த வாழ்வியலான வாய்மொழிப் பதிவுகளை இலக்கண விதிகளுக்கு உட்படுத்தித் திட்ட ஒழுங்கமைவுக்குள் கொண்டு வந்து பதிவு செய்வதற்கான கருவியாக ஒரு கோட்பாட்டினை உருவாக்குதல் என்பதாகும்.”** (சுஜாசுயம்பு, திணைக்கோட்பாடு - ஆய்வு அறம்) என்று திணைக்கோட்பாட்டின் விளக்கத்தை பலரும் பலவாறு விளக்குகின்றனர்.

**பதிணென்கீழ்க்கணக்கு**

தொல்காப்பியர் குறிப்பிடும் திணைக்கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, அறநூல்களை ஆராய்கையில் ஐந்திணை எழுபது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை போன்ற பல நூல்கள் இடம்பெறுகின்றன.

ஐந்திணை ஐம்பது - முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை,

நெய்தல்

ஐந்திணை எழுபது - குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல்

திணைமொழி ஐம்பது - குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல்

திணைமொழி எழுபது - குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல்

திணைமாலை நூற்றைம்பது- குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம்

கைந்திலை - குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல்

மேற்கண்ட பகுப்பு முறைகளில் திணை அமைப்பானது அமைந்துள்ளது.

**ஐந்திணை ஐம்பது**

முல்லைத்திணையை முதன்மையாக கொண்டது. அகப்பொருளின் நுட்பங்களை உணரும்படியாக, முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் திணைகளின் ஐந்தொழுக்கங்களையும் கொண்டு செவ்வனே அமைக்கப்பட்ட நூலாகும்.

**“ஐந்திணை ஐம்பதும் ஆர்வத்தின் ஓதாதார்**

**செந்தமிழ் சேராதவர்”** (ஐந்.ஐம்.01)

என்று சிறப்பிக்கும் வகையில் அமைந்த நூல். தலைவனைப் பிரிந்த தலைவி, அவன் வருவதாகச் சொல்லிச் சென்ற கார்காலம் வந்தும், தலைவன் தலைவியை சந்திக்க வரவில்லை. முல்லை போன்ற தலைவியே, தலைவன் சென்ற நாட்டில் கார்காலம் இல்லையோ என்று சந்தேகத்தோடு தலைவியிடம் கேட்கிறாள் தோழி. இங்கு தலைவனின் பிரிவு சூழலை தோழி எடுத்துரைப்பது முல்லை நிலத்தின் உரிப்பொருள் கோட்பாட்டை விளக்குவதாக அமைகிறது.

**“விம்பி உயிர்க்கும் விளங்கிழையார் - ஆற்றுமோ,**

**நம்மின் பிரிந்த இடத்து”** (ஐந்.ஐம்.39)

தலைவன், தலைவி தன்னை பிரிந்தால் மிகுந்த வருத்தமுற்று, விம்மி, ஏங்கி அழுவாள். பொருள் தேடச் சென்றால், தாங்கமாட்டாள், உயிர் நீத்துவிடுவாள் என்று கூறி பொருள்தேடச் செல்லும் பயணத்தை நிறுத்தி, செலவழுங்கினான்.

**“முகைவென்ற பல்லினாய்! இல்லையோ? மற்று**

**நமாசென்ற நாட்டுள்இக் கார்”** (ஐந்.ஐம்.03)

பொருளுக்காகப் பிரிந்த தலைவன், பாலைவழியை கொலைக் கருவிகளால் வீழ்த்திய தசையும், போரிலே மடிந்தாரின் பெயர் வரையப்பட்ட நடுகல்லின் நிழலில் பேய்கள் உறங்கும் படியான கொடிய காட்டு வழியாக விளக்கியுள்ளான். ஆறலைக் கள்வர்களால் தொல்லை நேரிடும் சூழலை தலைவி, தோழிக்கு அறிவுறுத்துவதாக அமைவது அவளது பயத்தையும் பாலைத்திணை தன்மையையும் காட்டுவதாக அமைகிறது எனலாம். இங்கு பாலைத்திணையின் தன்மையைத் திணைக்கோட்பாட்டிற்குள் விளக்கலாம்.

**ஐந்திணை எழுபது**

குறிஞ்சி நிலத்தை முதன்மையாகக் கொண்டு அமைக்கப்பட்டது. இந்நிலத்தில் குறவர், குறத்தியர் மற்றும் பலரும் வாழந்தனர். முருகனை தெய்வமாகக் கொண்டு வாழ்ந்த மக்கள், மலையில் கிடைக்கும் கிழங்குகளைக் கொண்டு வேட்டையாடி வாழ்க்கை வாழ்ந்தனர். நாடோடி வாழ்க்கையே இந்நிலத்து மக்களின் வாழ்க்கை. விலங்குகளிடம் தற்காப்புக்காக கூட்டு வாழ்க்கையை வாழலாயினர்.

**“சுரும்பு இமிர் சோலை, மலைநாடன் கேண்மை**

**பொருந்தினார்க்கு ஏமாப்பு உடைத்து”** (தி.எழு. 12)

ஆண் யானை மலையில் உள்ள நெற்பயிரை மேய்ந்துவிட்டு, மாமரச் சோலையில் உறங்கும். இத்தகைய சோலைகள் உடைய மலைநாட்டுத் தலைவனின் நட்பானது அவனை நெருங்கி வாழ்பவருக்கும் பாதுகாப்பாக அமையும் என்று தோழியிடம் தலைவி விளக்குகிறாள். குறிஞ்சித் திணையின் மலைவாழ் சூழலை விளக்குவதாக அமைகிறது. குறிஞ்சித்திணையின் சூழல் திணைக்குரிய கோட்பாட்டை பூர்த்தி செய்வதாக அமைந்துள்ளது எனலாம்.

**“பெருந் தகு தாளாண்மைக்கு ஏற்க அரும் பொருத்**

**ஆகும், அவர் காதல் அவா”** (தி.எழு. 29)

முயற்சியுடைய தலைவர், நடுகற்கள் நடக்காரணமான வீரர்கள் போரிடும் பாலை நில வழியில் செல்ல விரும்புகிறார்கள் என்று தலைவிக்குத் தோழி தலைவனின் பிரிவை உணர்த்துகிறாள். இங்கு பாலை நிலத்தின் உரிப்பொருள் தன்மையை திணைக்கோட்பாடாக உணரலாம்.

**"அராவழங்கு நீள் சோலை நாடனை நம் இல்,**

**இராவாரல் என்பது உரை"** (ஐ.எழு.14)

பெரிய சோலைகள் நிறைந்த மலைநாட்டுத் தலைவனே, பாம்புகள் நிறைந்திருக்கும் தன் வீட்டின் பக்கம் வரவேண்டாம் என்று தலைவி, தோழியிடம் தலைவனுக்கு எச்சரிக்கை உரைப்பதாக இப்பாடல் அமைகிறது. குறிஞ்சி நில வாழ்வியல் கோட்பாடாக அமைகிறது.

**திணைமொழி ஐம்பது**

குறிஞசியையே முதன்மையாகக் கொண்டு அமைகிறது இந்நூலும். ஒவ்வொரு நூலும் தத்தம் திணைகளின் வாயிலாக உரிப்பொருளையும், நிலத்தின் சூழலையும் கூற்றுக்களின் வழி எடுத்துரைக்கின்றன. அவைகளைக் கொண்டு திணைக்கோட்பாட்டை நாம் அறியமுடிகிறது. அவ்வகையில் குறிஞ்சியைக் கொண்டு அமைந்த பாடலைக் காணலாம்.

**"வில்லினர் வேலர், விரைந்து செல் அம்பினர்**

**கல்லிடை வாழ்நர் எமர்"** (தி.ஐம். 05)

மலையில் வாழும் தங்கள் மக்களான வேட்டுவர்கள் திணைபுனத்தினைக் காக்க, கையில் வேலையும், அம்பையும், வில்லையும் ஏந்திய வண்ணம் இரவில் காவல் செய்வர். ஆதலால் இரவில் தலைவனை, இம்மலைக்கு வரவேண்டாம் என்று தோழி எச்சரிப்பதாக இப்பாடல் அமைகிறது. இதில் குறிஞ்சி நில மக்களின் தொழிலைக் குறிக்கும் கருப்பொருளை திணைக்கோட்பாடாக அறியலாம்.

**"இருங்கடல் மாந்திய ஏர்கொள் எழிலி**

**கருங்கொடி முல்லை கவின முழங்கி"** (தி.ஐம். 26)

கடல் நீரைப் பருகிய மேகங்கள், ஒலியை எழுப்பி, பெருமழை பெய்த்து. முல்லை அரும்புகளும் வெடிதத்து. ஆகவே தலைவன் சொல்லிச் சென்ற காலமும் இது தலைவியே மயங்காதே! என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறினாள். இவ்விதம் இருத்தல் நிமித்தத்தை குறிக்கும் முல்லைக்கான உரிப்பொருளாக அமைந்து திணையின் கோட்பாட்டை விளைக்கிறது.

**"வெண்மரல் போல நிறந்திரிந்து வேறாய**

**வண்ணம் உடையேம்மற் றுயாம்...." (தி.ஐம்.27)**

*நுண்ணமயான ஆற்றின் மணல் போலக் கருமையாகயிருந்த ஐவகைப்பட்ட கூந்தலானது மலரின் நிறம் மாறுவதைப்போல, நிறம் மாறி காணப்படுகிறது. எனவே மருதநிலத் தலைவனோடு கூடும் தகுதியைப் பெறவில்லை என்று கூறி தலைவி வாயில் மறுத்து நின்றாள். மருதநிலத் தலைவனின் சூழல் இங்கு கோட்பாடாக பார்க்கப்படுகிறது.*

**"அடும்பிவர் எக்கர் அலவன் வழங்கும்**

**கொடுங்கழி சேர்ப்பன் அருளான்"** (தி.எழு.66)

*அடப்பங்கொடிகள் மேலேறிச் செல்லும்படியான மணல் மேடுகளில், நண்டுகள் வளைந்து செல்லும் கடற்கரைக்குத் தலைவன், வரைவு நீட்டித்தலால் அன்பில்லாதவனாகி நந்தலைமகள் துன்புறும்படியாக மற்றொருத்தியை நாடிச்சென்று விடுவானோ என்று அச்சம் கொள்கிறாள். இங்கு தலைவியின் இரங்கல் தன்மை நெய்தல் நிலத்திற்குரிய உரிப்பொருளாக அமைந்து கோட்பாட்டை விளக்குகிறது.*

**திணைமாலை நூற்றைம்பது**

*குறிஞ்சித் திணைக்குரிய முதலிடத்தை தந்த நூல்களில் திணைமாலை நூற்றைம்பதும் ஒன்று. தலைவியின் இற்செறிப்பு, பகற்குறி, இரவுக்குறி, வரைவு கடாயும் நிலை என ஐந்திணைக்குரிய ஒழுக்கங்களையும் திணைக்குறித்த உரிப்பொருள், கருப்பொருள் போன்றவற்றையும் திணைக்கோட்பாடாக நாம் பார்க்கிறோம்.*

**"அன்னையால் நீயும், அருந்தழை யாம் ஏலாமைக்கு**

**என்னையோ? நாளை எளிது"** (தி.நூற். 20)

*வேங்கை மலர் பூத்த மலைநாடனே, என் தமையன்மார்கள் புலியைப் போன்ற வீரமானமார்கள், நீயும் புலியைப் போன்று காணப்படுகிறாய் ஆக நீ இருந்தால் போர் ஏற்பட்டு விடும் என்று கூறி தலைவன் கொண்டு வந்த தழையாடையை தோழி ஏற்க மறுக்கிறாள். இங்கு கையுறை மறை என்னும் குறிப்பு திணையின் கோட்பாடாக அமைவதை அறியலாம்.*

**"இன்னா வெயில் சிறகால் மறைக்கும் சோப்ப! நீ**

**மன்னா வரவு மற!"** (தி.நூற். 36)

தாழையின் மொட்டுக்களை தன் குஞ்சுகள் என்று எண்ணி நாரை, தாம் கொண்டு வந்த இரையை அவைகளுக்கு ஊட்டும். அவை உண்ணாதது கண்டு வருந்தி, சூரியக்கதிர்கள் படாதபடி காக்கும். இத்தகைய நாட்டிற்குத் தலைவனே! நீ வந்து போவதை மறைப்பதற்கு பதில் நிலையான வரவை மேற்கொள்ள வேண்டும் என்று தோழி தலைவனிடம் தலைவியை திருமணம் முடிப்பதைப் பற்றி எடுத்துரைக்கிறாள். இது வரைவு கடாயும் நிலையாக அமைந்து திணைக் கோட்பாட்டை விளக்குகிறது.

**"விடுகயிற்றின் மாசுணம் வீயும் நீள் அத்தம்**

**அடுதிறலான் பின் சென்ற ஆறு"** *(தி.நூற். 75)*

பகலோனது, மிக்க சூடான கதிரோனானது முறுக்கிவிட்ட கயிறுபோலப் புரண்டழியும் அர்த்தம், பரந்த கூந்தலையுடைய தலைவிக்கு வருத்தத்தை தந்தது. இது பாலை நிலப்பிரிவின் கொடுமையை காட்டுவதாக அமைந்து, உரிப்பொருள் கோட்பாட்டை விளக்குகிறது.

**கைந்நிலை**

கை என்பது ஒழுக்கத்தைக் குறிப்பது. ஐந்திணை ஒழுக்கமும் விளங்கப்படுவதால், திணைக்கு பகுதி 12 பாடல்கள் வீதம் ஐந்திணை அறுபது என்று விளக்கப்படுகிறது. இதுவும் குறிஞ்சியை முதலாகக் கொண்டது.

**"பெருங்கல் மலைநாடன் பேணி வரினே,**

**சுருங்கும், இவள் உற்ற நோய்"** *(கைந். 08)*

நீண்ட கரிய தும்பிக்கையை உடைய, சினம் கொண்ட யானைகள், கரிய பாம்பின் பக்கத்தில் பெரிய கைகளால் தேனீக்களை விரட்டி, தேன்களை எடுத்து உண்ணும். அத்தகைய மலைநாட்டிற்குத் தலைவன் இவளை விரும்பி நாள்தோறும் வந்தால்

**"கடுகி அதர் அலைக்கும் கல் சூழ்பதுக்கை**

**விடுவில் எயினர்தம் விளை ஓர்த்து ஓடும்"** *(கைந்.13)*

கள்வர்கள் இருக்கக்கூடிய பாலைவழியிலே தான் பொருள் தேடச் செல்வதாகச் சொன்னவுடன், மாவடுவைப் பிளந்தாற்போல தலைவியின் கண்களிலே நீர் ததும்பியது என்று தலைவன் தோழியிடம் கூறினான். இவள் கொண்டிருக்கும் காமநோயானது விலகும் என்று தோழி செவிலியிடம் அறத்தோடு நிற்கிறாள். ஐந்திணை ஒழுக்கங்களில் ஒன்றான அறத்தோடு நிற்றலும் திணைக்கோட்பாட்டை விளக்குவதாக அமைகிறது எனலாம்.

**“மூத்தேம், இனி, பாண! முன்னாயின், நாம் இளையேம்,**

**காரத் தன் களவயல் ஊரன், கடிது, எமக்குப்”** (கைந். 45)

பாணனே! மழை பொழியும் குளிர்ந்த வயலை உடைய மருத்த்தலைவனே! அன்று தான் இளமையாக இருந்ததால் அன்பு மொழிகள் பேசியதாகவும், இன்று முதுமையாக இருப்பதால் தற்போது பிரிவதை நான் அறியேன் என்றும் வருந்திய தலைவி, பாணனிடம் கூறுகிறாள். இது வாயிலாக வந்த பாணனுக்கு, வாயில் மறுப்பாகத் தலைவி சொல்லியதாக அமைவது குறிப்பிடத்தக்கது.

இங்ஙனம் பதிணென்கீழ்க்கணக்கு நூல்களின் ஐந்திணை ஒழுக்கங்களையும், கூற்றுகளின் வழி எடுத்துரைக்கப்படுகிறது. இது திணை சிறப்பைக் காட்டுவதோடு, திணை சார்ந்த வாழ்வியலை கோட்பாடாகவும் பார்க்கப்படுகிறது.

**தொகுப்புரை**

பதிணென்கீழ்க்கணக்கு நூல்களில் காணலாகும் பாடல்களை திணை வாரியாகப்பகுத்து, கோட்பாடு ஆராயப்பட்டுள்ளது. திணை பகுப்பு முறைகளை தொல்காப்பியரின் கோட்பாட்டின் அகம், புறம் என்ற இரு கூறுகளின் படி பகுத்து தொகுக்கப்பட்டுள்ளது. திணைகளின் ஒழுக்கங்களையும், உரிப்பொருள், கருப்பொருள் கூறுகளையும் கெண்டு கோட்பாடு தொகுக்கப்பட்டுள்ளது. நிலத்திற்கான பண்புகளும், செயல்பாடுகளும் வழுவாது மக்கள் பின்பற்றும் வாழ்வியல், கோட்பாட்டின் வழி தொகுத்தாராயப்பட்டுள்ளது.

**துணைநூற்பட்டியல்**


1. இளம்பூரணர் - **தொல்காப்பியம் — பொருளதிகாரம்**
(அகத்திணையியல், புறத்திணையியல்)
வேலாயுதம் பிரிண்டிங் பிரஸ்,
தூத்துக்குடி, 1928.

2. புலவர் மாணிக்கனார் அ.- **பதிணென்கீழ்கணக்கு நூல்கள்**
மூலமும் தெளிவுரையும், மூன்றாம் தொகுதி,
வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17, 1991.

3. ஸ்ரீகுமார் எஸ். - **தமிழில் திணைக்கோட்பாடு**
பாவை அச்சகம் (பி) லிட்.,
முதற்பதிப்பு, சென்னை, 1991.

4. சுஜா சுயம்பு - **திணைக்கோட்பாடு ஆய்வு அறம்,**

உங்கர் நூலகம், மலர்.8, இதழ்.3,

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2016.

5. பிரகாஷ் வெ. - **திணை உணர்வும் பொருளும்**

பரிசில் புத்தக நிலையம், சென்னை, 2016.

***Sub-Bibliography***

1. *Illampuranar* - *Tholkappiyam-Porulathigaram (Agathinaiyal,purathinaiyal) Velaiutham printing press Thuthukudi ,1928.*
2. *Pulavar Manikkanar.A* - *Pathinenkeelkkanaku noolgal Moolamum Thelivuraium, Moondram Thoguthi, Varthamanavan Pathippagam,Chennai-17.1991.*
3. *Shrikumar.s* - *Thamilil Thinaikotpadu Pavai Achagam(p)lit, Mutharpathippu,Chennai,1991.*
4. *Sujasuyambu* - *Thinaikotpattu Aaivu Aram, Vungal Noolagam,Malar.8,Ithal 3, Niusenjuri bookhouse,Chennai,2016.*
5. *Pragash.v* - *ThinaiVunarvumPorulum Parisil Buthaga Nilayam,Chennai-2016.*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2024, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜனவரி இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com